Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, FEBRUARY 08, 2024

வியாழக்கிழமை பெப்ரவரி 08, 2024 | ஒளி: 09 கதிர்: 189 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

## ஐவர் தஞ்சம்



நாட்டிலிருந்து அகதிகளாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 குழந்தைகள் உட்பட ஐந்து பேர் ஒன்றாம் மணல் தீடையில் புதன்கிழமை (07) தஞ்சமடைந்துள்ளதாக, மரைன் பொலஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

பொருளாதார நெருக்கடிக்கு

# “அரசியல் தீர்வுகள் இல்லை”



- எமக்கு நாமே ஒளியாவோம்
- “வற்” திருத்த வாய்ப்பு ஏற்படும்
- பகையை மறந்துவிட்டு ஒன்றுபட்டுள்ளனர்
- மாற்றத்தை நம்மிலிருந்து ஆரம்பிப்போம்
- ஐக்கிய மக்கள் சக்தியால் முடியாதிருப்பது ஏன்?
- ஜே.வி.பியால் இணைய முடியாதிருப்பது ஏன்?
- தமிழ், முஸ்லிம் கட்சிகள் பயணத்தில் ஏன்? இணைய முடியாது

நெருக்கடி முகாமைத்துவத்தில் அடிப்படை என்னவாக இருக்க வேண்டும்? தங்களுக்குத் தாங்களே ஒளியாக வாழ வேண்டும்.

நெருக்கடியைச் சமாளிக்கும் செயல்முறை தன்னிடமிருந்தே ஆரம்பிக்க வேண்டும். உலகில் எங்கும் ஏனையவர்களைக் குறைகூறி நெருக்கடியைச் சமாளித்தது கிடையாது என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதியின் செயலால் நிதியும், காலமும் வீணடிப்பு



பாரதுரமான சட்டங்கள் இயற்றப்படும் விடயத்தில் சபாநாயகரின் செயற்பாடுகள் முறையற்றவை.எனவே, சபாநாயகருக்கு எதிராக விரைவில் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படுமென சுயாதீன எதிரணி எம்.

தொடர்ச்சி P2

## “ஒத்துழைப்பை பெற முடியாது”



உடல் பலத்தைக் காட்டி எமது ஒத்துழைப்பை ஒருபோதும் பெற முடியாது என்பதை ஜனாதிபதி நினைவில்கொள்ள வேண்டும். அவர் தலைமையிலான அரசின் சர்வாதிகார போக்கிற்கு எதிர்ப்பு தெரிவித்தே அவரின் கொள்கை பிரகடன உரையை புறக்கணித்து வெளிநடப்பு செய்தோம் என எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவும் எம்.பி.யுமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கெஹலியவுக்கு மற்றுமொரு தலையிடி



ஷேன் செனவிரத்ன

கல்வி அமைச்சின் சுற்றறிக்கையை மீறி, முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் பெயரில் கண்டி, குண்டசாலை பிரதேசத்தில் உள்ள பாடசாலைக்கு பெயரிடப்பட்டுள்ளதாகவும் அந்த பெயரை உடனடியாக நீக்க வேண்டும் எனவும் இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

1996ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உயிருள்ள ஒருவரின் பெயரை பாடசாலைக்கு பெயரிட முடியாது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல சமூகத்திற்கு தவறான உதாரணத்தை காட்டி குண்டசாலை

தொடர்ச்சி P2

## மறுத்தார் கெஹலிய

தரமற்ற மருந்து குறித்த விசாரணை தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சரும் பொதுஜன பெரமுன எம்.பி.யும் தற்போது தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கெஹலிய ரம்புக்வெலவுக்கு 9ஆவது பாராளுமன்றத்தின் 5ஆவது கூட்டத்தொடர் ஆரம்பநிகழ்வில் பங்கேற்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எனினும், அதனை அவர் மறுத்து விட்டார்.

தொடர்ச்சி P2

## வெளுத்து வாங்கிய அப்பா கைது



கௌசல்யா, பீ.கேதீஸ், ரஞ்சித் ராஜபக்ஷ

கட்டிலில் அமரச் செய்து தனது இரண்டு ஆண் பிள்ளைகளையும் கொடூரமாக தாக்கி வீடியோ எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்ட தந்தை ஒருவர் புதன்கிழமை (07) கைது செய்யப்பட்டதாக திம்புள்ள- பத்தனை பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் ஆனந்தசிறி தெரிவித்துள்ளார்.

திம்புள்ள- பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள தனது மனைவி வீட்டில் வசிக்கும் 33 வயதுடைய நபர் கடந்த திங்கட்கிழமை (05) தன்னுடைய 09 மற்றும் 05 வயதுடைய தனது இரண்டு பிள்ளைகள் மீது தாக்குதல் நடத்தியதாக பொலிஸ் நிலைய கட்டளைத் தளபதி தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2




## சஜித்துடன் தயா சந்தகிரி

முன்னாள் கடற்படைத் தளபதியும், பாதுகாப்பு படைகளின் பதவி நிலை பிரதானியுமான அட்மிரல் தயா சந்தகிரி ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளார்.

இலங்கை கடற்படையின் 14ஆவது கடற்படைத் தளபதியாக இருந்து ஓய்வு பெற்ற அட்மிரல் டி.டப்.கே.தயா சந்தகிரி (VSV, USP rcds, MSc (DS), psc, FCMI) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை சந்தித்து அரசியல் பயணத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டார்.

தொடர்ச்சி P2




## சோதனை திகதியே சோதனையானது

நமது நாட்டில் இடம்பெறும் சில சம்பவங்களை பார்க்கும் போது சிரிப்பதா? அழுவதா? என தெரியாமல் பலரும் விழிப்பிதுங்கி இருப்பது மட்டுமன்றி திகைத்தும் போய் நின்கின்றனர்.

அதிலொரு சம்பவம், அம்பாறை மோட்டார் திணைக்களத்தில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2



## சஜித் வெளியே; சரத் உள்ளே

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டு, கொள்கைவிளக்க உரையை ஆற்றிக்கொண்டிருந்தபோது, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச, சபையை விட்டு வெளியேறினார். எனினும், அக்கட்சியின் கம்பஹா மாவட்ட எம்.பியான சரத் பொன்சேகா,

தொடர்ச்சி P2



## சி.வியிடம் ரகசியம் சொன்ன ஜனாதிபதி

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து அக்கிராசன உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனதுரையை 11.15 மணியளவில் நிறைவு செய்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “அரசியல் தீர்வுகள் இல்லை”

**தேர்தலில் பெறும் வாக்குகளை இலக்காகக் கொண்டு, நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வழங்கி அல்லது வீண் கதை பேசி எம்மால் முன்னோக்கிச் செல்ல முடியாது**

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடரை, புதன்கிழமை (07) மிகவும் எளிமையான முறையில் ஆரம்பித்து வைத்து, அக்கிராசனத்தில் இருந்து ஆற்றிய கொள்கை பிரகடன உரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் தீர்வுகள் இல்லை. பொருளாதார ரீதியான தீர்வே உள்ளது. அறிவியல் தீர்வைத் தேட வேண்டும். அதனைவிடுத்து, சில அரசியல் குழுக்கள் பழைய அரசியல் தீர்வுகளைக் கூறி பிரசித்தமடைய முயற்சிப்பது கவலைக்குரியதாகும்.

ஆரம்பம் முதல் இன்று வரை உலகம் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தது. நாடுகள் நெருக்கடிகளைச் சந்தித்தன. தனிப்பட்ட வாழ்க்கையிலும் நெருக்கடி ஏற்பட்டது.

சில சமயங்களில் நெருக்கடியிலிருந்து விடுபட முடிந்தது. வேறு சில சந்தர்ப்பங்களில், நெருக்கடியிலிருந்து மீள முடியவில்லை. நெருக்கடியைச் சபித்துக் கொண்டிருப்பதன் மூலம் நெருக்கடியிலிருந்து மீள முடியாது. நெருக்கடிக்கான காரணங்களை விமர்சிப்பதன் மூலம் மீள முடியாது. நெருக்கடிகளைச் சரியாக நிர்வகிப்பதன் மூலம் தான் உலகமும் நாடுகளும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் நெருக்கடிகளைத் தீர்க்க முடிந்துள்ளது.

எம்மை எமக்கான ஒளியாக மாற்றாவிட்டால், நம் எண்ணங்களையும் கருத்துக்களையும் சீர்செய்யாவிட்டால், நமக்கு நன்மை நடக்காது. நாட்டுக்கு எந்த நன்மையும் இல்லை. நெருக்கடிக்கும் தீர்வு இல்லை.

முறைமையில் மாற்றம் இருக்காவிட்டால் சிஸ்டம் சேஞ்ச் பற்றி தொண்டைக் கிழியக் கத்தினாலும் நாம் அடிப்படையில் இருந்து மாறாவிட்டால் முறைமைய மாற்ற எம்மால் முடியாது.

நமது பொருளாதாரம் விண்கல் வேகத்தில் சரிந்தது. ஆனால், தற்போது எமக்கு அதனை மாற்ற முடிந்துள்ளது. அதை மீண்டும் ரொக்கெட் வேகத்தில் உயர்த்தியுள்ளோம். நாங்கள் வீ(V) வடிவ மீட்பு அல்லது வீ(V) வடிவ மீட்சியைப் பெற்று வருகிறோம்.

நாம் அடைந்த விசேடமான வெற்றியாக அதனைக் குறிப்பிடலாம். வீழ்ச்சியடைந்த நாடுகளின் பொருளாதார மீட்சி மிகவும் கடினமானது மற்றும் வேதனையானது. ஆனால் ஏனைய நாடுகளைப் போல நீண்ட கால சிரமங்கள் மற்றும் வலிகள் இல்லாமல் நமது பொருளாதாரத்தை மீட்டெடுக்க எம்மால் முடிந்தது.

கிரேக்கம், கடன் செலுத்த முடியாமல் 2009ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது. அதன் பின்னர் முழு நாடும் மிகவும் கடினமான சூழ்நிலையில் தனது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முயற்சித்தது. அந்தக் காலத்தில் பல நெருக்கடிகளைச் சந்தித்தது. மீண்டும் அந்தப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப சுமார் 10 வருடங்கள் தேவைப்பட்டது.

நமது நாடு குறுகிய காலத்தில் இத்தகைய விதிவிலக்கான சாதனைகளை எட்டுவது உண்மையில் உலக சாதனையாகும். எங்களால் எப்படி அவ்வாறான சாதனைப் படைக்க முடிந்தது?

அரசியல் ஆதாயத்துக்காக நான் ஒருபோதும் முடிவுகளை எடுக்கவில்லை. ஒவ்வொரு முடிவையும் நாட்டு நலன் கருதியே எடுத்தேன். எமக்குப் பாதகமாக இருந்தாலும் நாட்டுக்கு நன்மை பயக்கும் முடிவுகளை எடுக்க நாங்கள் தயங்கவில்லை. தனிப்பட்ட இலாபங்களை ஒதுக்கி வைத்துவிட்டு நாட்டுக்குச் சரியான கொள்கைகளைச் செயற்படுத்தினோம்.

பாராளுமன்றத்திலுள்ள சில தரப்பினர் அந்த முடிவுகளை எதிர்த்தனர். ஆனால் பெரும்பான்மையானோர் தமது தனிப்பட்ட அரசியல் நலன்களையும் இலக்குகளையும் பொருட்படுத்தாமல் நாட்டின் நலனுக்காக அந்த முடிவுகளுக்கு ஆதரவாகக் கையுயர்த்தினர். எதிர்காலத்தில் தேசத்தின் பாராட்டை அவர்கள் பெறுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

இருண்ட பொருளாதார சுரங்கத்திற்குள் சிக்கியிருந்த நாம் தற்போது சுரங்கத்தின் முடிவில் வெளிச்சத்தைக் காண்கிறோம். தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த பொருளாதாரம் தற்போது ஆபத்தான நிலையில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக, நாட்டு மக்கள் பலர் நினைத்துப் பார்க்க முடியாத இன்னல்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. சிலர் தொழில்களை இழந்தனர். மேலும் சிலர் தங்கள் வருமான வழிகளை இழந்தனர். சிலர் தொழில் வாய்ப்புகளை இழந்தனர். இன்னும் சிலர் உரிமைகளை இழந்தனர். பெரும்பாலான துன்பங்கள் சாதாரண மக்களுக்குத்தான் சொந்தமானது.

பெறுமதி சேர் வரி (வற்) பலருக்கு சுமையாக உள்ளது. இந்தப் பிரச்சினையை நாம் உணராமல் இல்லை. அந்தப் பிரச்சினைக்கு நாம் படிப்படியாக தீர்வுகளை வழங்கி வருகிறோம். பொருளாதாரம் ஸ்திரமாகும்போது, வரிச்சுமையைக் குறைப்போம். "வற்" வரியின் சதவீதத்தை திருத்துவதற்கான வாய்ப்பு ஏற்படும்.

**இருண்ட பொருளாதார சுரங்கத்திற்குள் சிக்கியிருந்த நாம் தற்போது சுரங்கத்தின் முடிவில் வெளிச்சத்தைக் காண்கிறோம். தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த பொருளாதாரம் தற்போது ஆபத்தான நிலையில் இருந்து மீட்கப்பட்டுள்ளது**

அரசியல் அபிலாஷைகளை மனத்தில் வைத்துக்கொண்டு, தேர்தலில் பெறும் வாக்குகளை இலக்காகக் கொண்டு, நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வழங்கி அல்லது வீண் கதை பேசி எம்மால் முன்னோக்கிச் செல்ல முடியாது. மாறாக எதிர்காலச் சந்ததியின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கான வேலைத் திட்டத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

நாட்டைக் கட்டியெழுப்பும் கனவை நனவாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென மீண்டும் கேட்டுக் கொள்கின்றேன். மீண்டும் - மீண்டும் உங்களுக்கு அழைப்பு விடுக்கிறேன். பொது நோக்கத்துடன் ஒன்றுபடுங்கள். மாற்றத்தை நம்மிலிருந்து ஆரம்பிப்போம். எமக்கு நாமே ஒளியாவோம்.

இந்தச் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளில் பல தசாப்தங்களாக என்னை விமர்சித்தவர்களே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உள்ளனர். நாட்டின் நன்மைக்காகவும், இளையோரின் எதிர்காலத்திற்காகவும் பொதுஜன பெரமுனவின் பெரும்பாலானவர்கள் பழைய பகையை மறந்துவிட்டு ஒன்றுபட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருப்பவர்கள் என்னுடன் பல காலமாக அரசியலில் ஈடுபட்டவர்கள்.

நான் அரசியலுக்கு அறிமுகப்படுத்தியவர்களும் உள்ளனர். நாட்டுக்கான பொது பயணத்தில் இணைந்துகொள்ளப் பொதுஜன பெரமுனவால் முடியுமாயின் ஐக்கிய மக்கள் சக்தியால் அதனைச் செய்ய முடியாதிருப்பது ஏன்?

மக்கள் விடுதலை முன்னணி நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் எம்முடன் நெருக்கமாகச் செயற்பட்டது. ஊழல் ஒழிப்பு பிரிவின் அலுவலகத்திற்கு ஆனந்த விஜயபாலவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டது.

அவ்வாறிருக்க நாட்டின் பொது முன்னேற்றத்திற்கான பயணத்தில் இணைய முடியாதிருப்பது ஏன்?

இந்தச் சபையில் உள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகள் என்னுடன் இணைந்து பணியாற்றியுள்ளன. எனினும், நாட்டிற்காக இந்தக் கட்சிகளுக்கு பொதுப் பயணத்தில் ஏன் இணைந்துகொள்ள முடியாது.

நாம் தேர்தலில் வெவ்வேறாகப் போட்டியிடுவோம். ஆனால் நாட்டின் முன்னேற்றத்திற்கான முயற்சிகளில் இணைந்துகொள்வோம் என்றார்.

## கெஹலியவுக்கு மற்றுமொரு தலையிடி

பிரதேசத்தில் உள்ள ஆரம்ப பாடசாலைக்கு “கெஹலிய ரம்புக்வெல்ல ஆரம்ப பாடசாலை” என பெயரிட்டுள்ளார்.

எனவே, உயிருடன் இருக்கும் ஒருவரின் பெயரை பாடசாலைகளுக்கு வைப்பதற்கு எதிராக அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜோசப் ஸ்டார்லின் வலியுறுத்தினார்.

### மறுத்தார் கெஹலிய

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அவரை பாராளுமன்றத்திற்கு அழைத்து வருமாறு சிறைச்சாலைகள் திணைக்களத்துக்கும் சபாநாயகர் அலுவலகத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

அமைச்சுப் பதவியில் இல்லாத காரணத்தினால் ஹெகலிய ரம்புக்வெல்லவுக்கு பாராளுமன்ற அமர்வில் பங்கேற்க பின் வரிசையில் ஆசனமொன்றும் ஒதுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சி.வியிடம் ரகசியம் சொன்ன ஜனாதிபதி

தனது உரையை நிறைவு செய்து கொண்டதன் பின்னர், சபா பீடம் வழியாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெளியேறிய போது, சபையில் இருந்த ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.

அனைவரையும் பார்த்து தலையை அசைத்து தனது நன்றியைத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, எழுந்து நின்று கொண்டிருந்த தமிழ் மக்கள் தேசிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரான முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் அருகில் சென்று ஒருசில வினாடிகள் ஏதோ கூறிவிட்டுச் சென்றார்.

## சஜித் வெளியே; சரத் உள்ளே

சபைக்குள் அமர்ந்திருந்தார்.

எனினும், ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்களான ராஜித சேனாரத்ன, குமார் வெல்கம, இஷாக் ரஹ்மான், வடிவேல் சுரேஸ், பைசல் காசிம், ஏ.எச்.எம்.பௌசி, சபைக்குள் அமர்ந்திருந்து, ஜனாதிபதியின் உரையைக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடாக தெரிவு செய்யப்பட்டிருந்த எம்.பியான பாட்டலி சம்பிக்க ரணவக்கவும் சபையில் இருந்தார். ஐந்தாவது கூட்டத்தொடர் ஆரம்பிக்கும் வைபவத்தைப் புறக்கணிக்க, ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்திருந்த போதும், அதன் பிரபல்யமானவர்கள் சபைக்குள் இருந்தமை விசேட அம்சமாகும்.

அத்துடன், பகல் தேநீர் விருந்துபசாரத்திலும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## “ஒத்துழைப்பை பெற முடியாது”

**மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறித்து விட்டு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வருமாறு ஜனாதிபதி தனது கொள்கை விளக்கவுரையில் அழைப்பு விடுக்கிறார்**

பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் புதன்கிழமை (07) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

9ஆவது பாராளுமன்றத்தின் 5ஆவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி ஆற்றிய கொள்கை பிரகடன உரையை நாம் முழுமையாக நிராகரிக்கின்றோம். நாம் பாரம்பரியமான எதிர்க்கட்சிகளை போலல்லாமல், நாட்டுக்காக எடுக்கப்படும் சிறந்த திட்டங்களுக்கும், தீர்மானங்களுக்கும் நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்கியுள்ளோம்.

ஆனால், பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதாக கூறிக்கொண்டு ஜனாதிபதி உட்பட அரசு சர்வாதிகாரத்தனமாக செயற்படுகிறது. நிகழ்நிலை காப்புச் சட்டத்துக்கு தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கடும் எதிர்ப்பு காணப்பட்ட போதும் அவற்றைக் கவனத்திற் கொள்ளாமல் சர்வாதிகாரமான முறையில் அந்த சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றம் நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் குறித்து முன்வைத்த முக்கிய பல திருத்தங்களில் 11 திருத்தங்களை அரசு சட்டத்துக்குள் உள்வாங்கவில்லை.

அரசாங்கம் கண்களை மூடிக் கொண்டு சட்ட மூலங்களைத் தயாரிக்கிறது. அந்த சட்டமூலங்கள் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்படும்போது, பெரும்பாலான சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரண் என்றே உயர்நீதிமன்றம் வியாக்கியானம் வழங்குகின்றது.

இவ்வாறான நிலையில், நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறித்து விட்டு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வருமாறு ஜனாதிபதி தனது கொள்கை விளக்கவுரையில் அழைப்பு விடுக்கிறார்.

உடல் பலத்தைக் காட்டி எமது ஒத்துழைப்பை ஒருபோதும் அவரால் பெற முடியாது.அவர் தலைமையிலான அரசின் சர்வாதிகார போக்கிற்கு எதிர்ப்பு தெரிவித்தே அவரின் கொள்கை பிரகடன உரையைப் புறக்கணித்து வெளிநடப்பு செய்தோம் என்றார்.

## ஐவர் தஞ்சம்

நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசிய தேவைகளுக்காக கடும் சிரமத்துக்கு ஆளாகி உள்ளனர்.

வவுனியா நெடுங்குழி பகுதியைச் சேர்ந்தவர் அவரது மனைவி மற்றும் அவரது 3 குழந்தைகள்

என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் மன்னாரில் இருந்து ரூ.1.50 இலட்சம் கொடுத்து படகில் செவ்வாய்க்கிழமை (06) புறப்பட்டு, ராமேஸ்வரம் அடுத்துள்ள தனுஷ்கோடி அரிச்சல்முனை ஒன்றாம் மணல் திட்டில் கடற்கரையில் புதன்கிழமை (7) அதிகாலை வந்திறங்கினர்.

தகவலறிந்த இராமேஸ்வரம் மரைன் பொலிஸார், இலங்கைத் தமிழர்களை மீட்டு மண்டபம் மரைன் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதேவேளை, பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு வந்த அகதிகளின் எண்ணிக்கை 293 ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதியின் செயலால் நிதியும், காலமும் வீணடிப்பு

பி.யான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் புதன்கிழமை (07) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கூறுகையில், புதிய பாராளுமன்ற கூட்டத்தொடரை ஜனாதிபதி ஆரம்பித்து வைத்து கொள்கை பிரகடன உரையாற்றியபோது, பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகக் குறிப்பிடுகிறார்.அவரின் இந்த உரையில் குறிப்பிட்ட விடயங்கள் ஏதும் இல்லை . கடந்த ஆண்டு குறிப்பிட்ட விடயங்களையே தற்போதும் முன்வைத்துள்ளார்.

9ஆவது பாராளுமன்றத்தின் 4 ஆவது கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டதால் பாராளுமன்றத்தில் உள்ள 91 குழுக்களில் 64 குழுக்கள் கலைக்கப்பட்டுள்ளன. மீண்டும் புதிதாகக் குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும். ஜனாதிபதியின் இவ்வாறான தேவை யற்ற செயற்பாடுகளினால் அரச நிதியும்,காலமும் வீணடிக்கப்பட்டுள்ளது. அரச நிதி மோசடி குறித்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் அனைத்தும் இடை நிறுத்தப்பட்டுள்ளன. ஆகவே, ஊழல் மோசடிக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில்தான் ஜனாதிபதி செயற்படுகின்றார்.

நாட்டில் சுதந்திரமான முறையில் தேர்தலை நடத்த முடியாத வகையில் பாரதூரமான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. நிகழ்நிலை காப்புச் சட்டத்தினால் நாட்டு மக்களின் பேச்சுரிமை பறிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பாரதூரமான சட்டங்கள் இயற்றப்படும் விடயத்தில் சபாநாயகரின் செயற்பாடுகள் முறையற்றவை. எனவே சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டு வரப்போவதாக எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார். சகல எதிர்க்கட்சிகளுடன் கலந்துரையாடி சபாநாயகருக்கு எதிராக வெகு விரைவில் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படும் என்றார்.

## வெளுத்து வாங்கிய அப்பா கைது

இதற்கமைய, பிள்ளைகளின் தாயார் வெளியூரில் இருப்பதாகவும், பிள்ளளைகள் பாட்டியின் பராமரிப்பில் இருப்பதாகவும், பிள்ளைகளின் தந்தை கொழும்பிலுள்ள கார் சுத்தம் செய்யும் மையத்தில் பணிபுரிந்து வருவதாகவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

வீடியோவின் இறுதியில் பார்த்தாயா? என்னுடைய பிள்ளைகள் என்னுடைய பேச்சை கேட்கவேண்டும் என்றும் கூறுகின்றார். அப்படியாயின், தன்னுடைய மனைவிக்கு அனுப்பும் வகையிலேயே இவ்விரு பிள்ளைகளையும் அந்நபர் துன்புறுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சோதனை திகதியே சோதனையானது

சாரதி பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஒருவர், சாரதி அனுமதிப்பத்திரத்தை எடுப்பதற்காக விண்ணப்பித்துள்ளார். அவ்வாறு விண்ணப்பிக்கும் சகலருக்கும் நடைமுறை சோதனைக்கான (Practical test date) திகதி அறிவிக்கப்படும்.

எனினும், அம்பாறை மோட்டார் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள சோதனைக்கான திகதியே, விண்ணப்பித்தவருக்கு சோதனையாகியுள்ளது.

அதில், குத்தப்பட்டுள்ள இறப்பர் முத்திரையில், 2024 பெப்ரவரி 30ஆம் திகதி என குறிப்பிடப்பட்டுள்ளது.

எந்தவொரு வருடத்திலும் 30 ஆம் திகதி இல்லை. இதில், இவ்வருடம் 30 ஆம் திகதி வருமாறு அழைத்துள்ளனர். அவ்வாறு அழைக்கப்பட்டமையே பெரும் சோதனையானது என பலரும் தெரிவிக்கின்றனர்.

## சஜித்துடன் தயா சந்தகிரி

கடல்சார் மற்றும் கடற்படைத் துறையில் அவருக்கு இருக்கும் பரந்த அறிவு மற்றும் அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவரை ஐக்கிய மக்கள் சக்தியின் கடல்சார் மற்றும் கடற்படைக் கொள்கைகள் குறித்த ஆலோசகராகப் புதன்கிழமை (07) நியமித்தார்.

மூன்று தசாப்த கால யுத்தத்தில் அவர் ஆற்றிய தாராள பங்களிப்பு காரணமாக 2001ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 01ஆம் திகதி முதல் இலங்கை கடற்படையின் தளபதியாக நியமிக்கப்பட்டார். 53 வருட கால கடற்படை வரலாற்றில் மிகவும் அனுபவம் வாய்ந்த கடற்படை தளபதியாக இவர் வரலாற்றிலும் இடம்பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பதவிநீக்கம், இடமாற்றத்தை

# உடனடியாக இரத்து செய்

## இ.மி.ச ஊழியர்கள் நுவரெலியாவில் ஆர்ப்பாட்டம்

■ ஆ.ரமேஸ்.

அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றிருந்த இலங்கை மின்சார சபை ஊழியர்கள் சிலரை பணிநீக்கம் செய்திருந்த அமைச்சு, மேலும் சிலரை இடமாற்றம் செய்துள்ளது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்து நுவரெலியாவில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியாவில் இலங்கை மின்சார சபையில் பணியாற்றும் 20க்கு மேற்பட்ட ஊழியர்கள், புதன்கிழமை (07) மதிய உணவு இடைவேளையின் போது, மின்சார சபைக்கு அருகில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமக்கான சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்த ஆர்ப்பாட்டக்காரர்கள், இலங்கை மின்சார சபையை தனியார் மயமாக்கும் அரசின் திட்டத்தையும் கண்டித்துள்ளனர்.



அரசாங்கத்துக்கு எதிராக அரசியல் கட்சிகள் நடத்திய போராட்டங்களில் கலந்து கொண்டதை காரணம் காட்டி, இலங்கை மின்சார சபை ஊழியர்களில் 68க்கும் மேற்பட்டவர்களை பதவி நீக்கம் மற்றும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதை இரத்து செய்து அவர்களை மீண்டும் சேவையில் அமர்த்த வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

# “விளையாட்டு துறையை ஊக்குவிப்பது நமது கடமை”



■ ஜவ்பர்கான்

மட்டக்களப்பு-கிரான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தேவபுரம் விளையாட்டு மைதானம் பல இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு, முன்னாள் பிரதி அமைச்சரும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விநாயகமூர்த்தி முரளிதரனினால் புதன்கிழமை (07) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த மைதானம் திறப்பு விழா, முன்னாள் பிரதி அமைச்சரின் இணைப்பாளரும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் அமைப்பாளருமான நந்தகுமார் பிரதீப் தலைமையில் இடம்பெற்றதுடன், இந்த விழாவின்போது, விளையாட்டு நிகழ்ச்சிகளும் இடம்பெற்றுள்ளன .

இதன்போது உரையாற்றிய முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், “தற்போதைய ஜனாதிபதியின் காலத்தில் பல அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இந்நிலையில், விளையாட்டு துறையை ஊக்குவிப்பது நமது கடமையாகும். ஆகவே, இவ்வாறான மைதானங்களை புனரமைப்தனூடாக இந்த மாவட்டத்தில் விளையாட்டு துறையை கட்டி எழுப்ப முடியுமென எதிர்பார்க்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

# பெருந்தோட்டத்துறைக்கு காணி உறுதி வழங்கவும்

காணி உறுதிப் பத்திரம் வழங்கும் நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் தேசிய மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், பெருந்தோட்டத்துறை மக்களுக்கும் அது வழங்கப்பட வேண்டும் என்பதை தாம் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாக ஜனாதிபதியின் மலையக பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தில் புதன்கிழமை (07) நிகழ்த்தப்பட்ட கொள்கை விளக்க உரை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இது தொடர்பில் காணியமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவுடனும் தாம் கலந்துரையாடியுள்ளதாக தெரிவித்த அவர், அடுத்த கட்ட நடவடிக்கையாக அது விடயத்தில் கவனம் செலுத்தப்படும் என அவர் தமக்கு உறுதியளித்ததாகவும் குறிப்பிட்டார்.

**“ பெருந்தோட்ட தொழிலாளர்களின் காணிகளை அவர்களுக்கு வழங்கிவிட்டு அதன் பின்னர் ஏனைய பகிர்ந்தளிப்பு தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்**



அத்துடன், அரசாங்கத்திற்கு சொந்தமான தோட்டநிறுவனங்களின் காணிகள் பகிர்ந்தளிக்கப்படும்போது, காலம் காலமாக மலையகத்தில் வாழ்ந்து வரும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் காணிகளை அவர்களுக்கு வழங்கிவிட்டு அதன் பின்னர் ஏனைய பகிர்ந்தளிப்பு தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

# யாழுக்கு வந்தடைந்த ஹரிஹரன் குழு

■ நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள ஹரிஹரன் இசை நிகழ்வுக்காக இந்திய பாடகர் ஹரிஹரன் உள்ளிட்ட குழுவினர் புதன்கிழமை (07) யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம்-முற்றவெளி மைதானத்தில் வெள்ளிக்கிழமை (09) நடைபெறவுள்ள இந்த இசை நிகழ்ச்சியில் தென்னிந்திய திரைப்பட பிரபலங்களான நடிகை தமன்னா, ஐஸ்வர்யா ராஜேஷ், யோகி பாபு, சாண்டி மாஸ்டர், புகழ், பாலா உள்ளிட்ட பல கலைஞர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.



மேலும், இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக நடிகை ரம்பா மற்றும் நடன இயக்குநர் கலா மாஸ்டர் ஆகியோரும் யாழ்ப்பாணத்தை வந்தடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

# ஒளி பாய்ச்சி மீன் பிடித்த இருவர் கைது

■ எஸ். தில்லைநாதன்

சட்டவிரோதமாக ஒளி பாய்ச்சி மீன் பிடித்தலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர் இருவர், கடற்படையினரால் செவ்வாய்க்கிழமை (06) கைது செய்யப்பட்டுள்ளார்.

கடலில் சுற்றுக் காவலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வெற்றிலைக்கேணி கடற்படையினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட 23 வயதுடைய சந்தேகநபரையும் கைப்பற்றப்பட்ட பொருட்களையும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்கள அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

உணவு கையாள்பவர்களுக்கு

# தடுப்பு ஊசி

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடியில் உணவு கையாள்பவர்களுக்கான நெருப்புக் காய்ச்சல் தடுப்பு மருந்து ஏற்றும் நடவடிக்கை செவ்வாய்க்கிழமை (06) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். சுகுணனின் ஆலோசனைக்கும் அறிவுறுத்தலுக்கமைய, காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். நசிர்தீனின் வழிகாட்டலில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் பசீர், பொதுச் சுகாதார பரிசோதகர் றஹ்மத்துல்லாஹ் ஆகியோரால் புதிய காத்தான்குடி பத்ரியா ஜும்மா பள்ளி வாயல் மண்டபத்தில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்போது காத்தான்குடியிலுள்ள உணவு கையாள்பவர்கள் 150 பேருக்கும் நெருப்புக் காய்ச்சல் தடுப்பு மருந்து ஏற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



படையெடுக்கும் காட்டு யானைகளால்

# அச்சத்தில் விவசாயிகள்

■ வ.சக்தி

மட்டக்களப்பு - போரதீவுப் பற்று பிரதேசத்தில் தற்போது பெரும்போக வேளாண்மை அறுவடை இடம்பெற்று வருகின்ற நிலையில், புதன்கிழமை (07) காலை காட்டுயானைகள் கூட்டம் கூட்டமாக வயல் நிலங்களுக்குள் ஊடுருவி நெற்பயிர்களையும் துவம்சம் செய்துள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், குறித்த பிரதேசத்தில் உள்ள வாவியை அண்மித்துள்ள பற்றைக் காட்டுப் பகுதியில் இக்காட்டு யானைகள் தங்கியுள்ளதால் அப்பகுதியில் வேளாண்மை அறுவடை வேலைகளில் ஈடுபட்டு



வரும் விவசாயிகளும் தொழிலாளர்களும் பெரும் அச்சத்தில் உள்ளதாக கூறப்படுகின்றது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் வெல்லாவெளி காரியாலய அதிகாரிகள், "கிராமங்களை அண்மித்து காட்டு யானைக் கூட்டம் நிற்பதாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளது. யானைகளைப் பகல் வேளையில் அப்புறப்படுத்த முடியாது, அதனை இரவு வேளையிலேயே வெளியேற்றுவதற்குரிய நடவடிக்கை எடுத்துள்ளோம்" என தெரிவித்துள்ளனர்.



# துப்பாக்கி சூட்டில் குடைசாய்ந்த டிப்பர் வாகனம்

■ எம்.றோஸாந்த்

யாழ்ப்பாணம்-புத்தூர் பகுதியில் மணல் ஏற்றி சென்ற டிப்பர் வாகனம் மீது, புதன்கிழமை (07) துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது.

சட்டவிரோத மணலுடன், டிப்பர் வாகனமொன்று வேகமாக பயணிப்பதாக பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், புத்தூர் பகுதியில் வைத்து டிப்பர் வாகனத்தை வழிமறித்துள்ளனர்.

இதன்போது, டிப்பர் சாரதி வாகனத்தை நிறுத்தாது சென்றமையால், வாகனத்தின் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ள நிலையில், டிப்பர் வாகனம் வீதியில் குடைசாய்ந்துள்ளது.

சட்டவிரோதமாக மணலை ஏற்றி சென்றமையால், சாரதி வாகனத்தை நிறுத்த வில்லை என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதுடன், குறித்த சாரதி, டிப்பர் வாகன உரிமையாளர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டு, அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# ஆறு மீனவர்களுக்கு விடுதலை

இலங்கை கடற்பரப்பில் கடந்த மாதம் 23ஆம் திகதி கைது செய்யப்பட்ட 6 இந்திய மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தினால் செவ்வாய்க்கிழமை (06) விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து கடந்த 23ஆம் திகதி குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டதுடன், 2 படகுகளும் கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பில் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சிறைத்தண்டனை என்ற நிபந்தனையின் அடிப்படையில், ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தினால் 6 மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.



# சிறார்கள் மீதான வன்முறைகளுக்கு எதிராக தண்டனை அவசியம்

ஒவ்வொரு மனிதரிடத்திலும் அன்பு, பொறுமை, பணிவு, மனித நேயம், நம்பிக்கை, தைரியம், மன உறுதி, பேராசை,மன்னிக்கும் பண்பு, கோபம், முயற்சி, கடின உழைப்பு ஆகிய பண்புகள் இருக்கவே செய்கின்றன. இதில், கோபத்தைத் தேவையான இடங்களில் மட்டுமே பயன்படுத்த வேண்டும். வாழ்க்கையில் முன்னேர வேண்டுமாயின் பேராசை இருக்கத்தான் செய்யும்.

மேலே குறிப்பிட்ட நற்பண்புகளில், சிலவற்றைத் தேவையான நேரங்களிலும் உடனடியாக கடைப்பிடிக்கவேண்டிய பண்புகளை அந்நொடிப்பொழுதிலும் கடைப்பிடித்தால், வாழ்க்கையில் பாரிய பிரச்சினைகளைச் சந்திக்கவேண்டிய தேவையும் இல்லை. பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலைமையும் ஏற்படாது.

இவற்றை எல்லாம் குழந்தைகளிடம் எதிர்பார்க்கவே முடியாது. தீக்குச்சி ஒன்றைப் பற்றவைத்து, அக்குழந்தையின் அருகில் கொண்டுச்சென்றால், அதனைப் பிடிக்கவே முயற்சிக்கும். ஏனெனில், குழந்தைகளிடம் இருப்பதெல்லாம். பிஞ்சு மனசு, எதையும் எடுக்கத்தான் செய்யும். அவ்வாறான குழந்தைகளுக்குக் கொஞ்சம், கொஞ்சமாகச் சொல்லிக்கொடுக்கவேண்டும்.

நமது நாட்டை பொறுத்தவரையில், குழந்தைகள், சிறுவர்கள், பெண் பிள்ளைகளுக்கு எதிராக வன்முறைகள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. இதில், தாய்மார் தங்களுடைய குழந்தைகளைக் கணவனிடம் விட்டுவிட்டு, வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்குச் சென்றுவிடுகின்றனர். ஒரு சில மாதங்களுக்குச் சம்பளத்தை அனுப்பாவிடின், மனைவியைப் பழிவாங்கும் நோக்கில், பிள்ளைகளை அடித்துத் துன்புறுத்தும் கணவன், அதனை வீடியோவாக பதிவு செய்து அனுப்பிவிடுகின்றார்.

அவ்வாறான சம்பவமொன்று திம்புள்ளை-பத்தனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது. அந்த வீடியோ, சமூக வலைத்தளங்களில் வைரலானதை அடுத்து, அடித்துத் துன்புறுத்திய தந்தை கைது செய்யப்பட்டுள்ளார்.

இது ஒரு சம்பவமாகும். இதுபோன்ற, வெளிச்சத்துக்கு வராத சம்பவங்களும் இருக்கத்தான் செய்கின்றன. வீட்டுப் பணிப்பெண்களாகச் செல்லும் தாய்மார், தங்களுடைய பெண் பிள்ளைகளையும் கணவனிடம் விட்டுச் சென்றுவிடுகின்றனர். அப்பிள்ளைகள், தன்னுடைய தந்தையால், சிறிய தந்தையால் இன்றேல் உறவினர்களால் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகும் சம்பவங்களும் இடம்பெறாமல் இல்லை.

இவ்வாறான சம்பவங்கள், குடும்பத்தையே நடுவீதிக்கு இழுத்துவிடுகின்றன. அந்த பெண் பிள்ளையின் எதிர்காலமே கேள்விக் குறியாகிவிடுகின்றது. பிள்ளைகள் இருக்கும் வீடொன்றில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பொருட்கள் அந்தந்த இடங்களிலேயே இருக்குமாயின், பிள்ளைகள் எதனைச் சிந்திக்கவில்லை என்பதே அர்த்தமாகும்.

அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் பொருட்கள் ஆங்காங்கே இழுத்து வீசப்பட்டு வீடு முழுவதும் சிதறிக் கிடக்குமாயின், அந்தப் பிள்ளைகள் புதுப்புது முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதே அர்த்தமாகும். ஆகையால்தான் குழந்தைகள் மனநலத் துறை மருத்துவர்கள், அடிப்பதாலோ வேறு தண்டனைகளைக் கொடுப்பதாலோ பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்பதைத் தெளிவாகக் கூறியிருக்கின்றனர்.

சிறுவர்கள் மீதான வன்முறைகளுக்கு எதிரான சட்டங்கள் உள்ளன. எனினும், இன்னுமொரு தாய், தந்தை, குழந்தைகள் மீது வன்முறையை காட்டமல் இருக்கும் வகையில் சட்டங்கள் கடுமைப்படுத்தப்படவேண்டும் என்பதே எமது அவதானிப்பாகும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

இருவர் தங்களுக்குள் பேசியபடி சென்றார்கள். அவர்களில் ஒருவர், ஊரில் யாரோ இளைஞர்கள் சண்டை செய்ததாகச் சொன்னார். எங்கு நடந்தது என்பது பற்றிப் பேசாமல் சென்று கொண்டிருந்தனர்.

இதைக் கேட்ட வீதியின் அருகே நின்றிருந்தவர், “என்ன எங்கள் ஊரில் சண்டையா” எனக் கேட்டுவிட்டு, உடனே ஊருக்குள் சென்று, தனது கற்பனைகளையும் சேர்த்து, வாய், மூக்கு, வால் என்பவற்றைக் சேர்த்து, அங்குள்ள ஒருவருக்குச் சொல்ல, அவரும் அதற்கு மேலும் பல கதைகளைச் சோடித்துச் சொல்ல, ஊர்ச் சனங்களும் ஆவேசத்துடன் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, அவர்களைத் தேடிச் சென்றார்கள்.

ஊரே பரபரப்படைந்தது. முடிவில் அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பதை அறிந்து, “யாரடா இதைச் சொன்னது” எனக் கேட்க, கதையைக் கட்டியவர்கள் ஒளித்துத் தப்பித்து விட்டார்கள்.

தத்தமது காரியங்களைச் செய்தால், வீணான சிந்தனைகள் புறப்படாது. கலவரங்கள் எல்லாமே வதந்திகளால்த் தான் உருவாகின்றன. யுத்தங்கள் கூட!

நன்றி-பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

# சின்ன மீன்கள் மட்டுமே சிக்குகின்றன

முருகாநந்தன் தவம்

இலங்கையில் போதைப்பொருள் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தி, திட்டமிட்ட குற்றங்களில் ஈடுபடும் வலையமைப்பை வீழ்த்துவதை இலக்காகக்கொண்டு பொலிஸ் திணைக்களத்தினால் கடந்த டிசெம்பர் 17ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டுள்ள ‘யுக்திய’ (நீதி) தேடுதல் நடவடிக்கை பிரபல போதைப்பொருள் வர்த்தகர்கள், பிரபல பாதாளக் குழுத் தலைவர்கள், அவர்களுடன் தொடர்புபட்ட அரசியல்வாதிகளை பாதுகாக்கும் ‘யுக்தியா’ என்ற சந்தேகத்தை வலுப்படுத்தியுள்ளது.

கடும் எதிர்ப்புக்கள், சர்ச்சைகள் மத்தியில் பதில் பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் பதவியேற்றதைத் தொடர்ந்து, கடந்த டிசம்பர் 17ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டுள்ள ‘யுக்திய’ தேடுதல் நடவடிக்கை இரு மாதங்களை நெருங்கிவரும் நிலையில், ஜனவரி 17ஆம் திகதி வரையான ஒரு மாத காலத்தில் மட்டும் 40,590 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அதில் 38,225 பேர் போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள். இவர்களில் 1,703 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 225 பேரின் சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஒரு மாத காலத்தில் 4,791 மில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. 725 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்து விற்பனை முடக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஒரு மாதத்தில் மட்டும் கைதான இந்த 40,590 பேரில் ஒருவர்கூட போதைப்பொருள் இறக்குமதியாளரோ, விநியோகஸ்தரோ, வர்த்தகர்கரோ, பாதாளக் குழுத்தலைவரோ, அவர்களுடன் தொடர்புபட்ட அரசியல்வாதியோ அல்ல.

இதேபோன்று கடந்த 2005இல் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தினால் ‘போதைக்கு முற்றுப்புள்ளி’ என்ற வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த திட்டத்தின் கீழ், பொலிஸாரினால் ‘ஒபரேஷன் க்ளீன் அப்’ தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதன் பின்னர், 2015இல் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், போதைப்பொருளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்திருந்தார்.

ஆனால், ரணில் விக்ரமசிங்க ஆட்சியில் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில், நாடளாவிய ரீதியில் பெரும் முனைப்புடன் ‘யுக்திய’ என்ற போர்வையில் முன்னெடுக்கப்பட்டு வரும் என்கவுண்டர்கள் (போட்டுத்தள்ளுதல்), தேடுதல்கள், சுற்றிவளைப்புக்கள், கைதுகள், சொத்துக்களை அரசுடைமையாக்குதல் போன்றவை நீதிக்குப் புறம்பாக நடப்பதனாலும், அரசியல் ஆதாயங்கள், பழிவாங்கல்களுக்கு ‘யுக்திய’ பயன்படுத்தப்படுவதாலும் மக்களுக்கான நீதி கடுமையாக மீறப்படுகின்றமையாலேயே இதற்கான எதிர்ப்புக்கள் வலுத்து வருகின்றன.

‘யுக்திய’ நடவடிக்கையுடன் தொடர்புடைய வகையில் இடம்பெறும் சித்திரவதைகள், மிகமோசமாக நடத்தப்படல் மற்றும் தன்னிச்சையாகக் கைது செய்து தடுத்து வைத்தல் போன்ற சம்பவங்கள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது தீவிர கரிசனையை வெளிப்படுத்தியுள்ளது. தற்போதைய சட்ட அமுலாக்க செயன்முறை தொடர்பில் ஜனாதிபதியும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும், இலங்கை அரசாங்கமும் அதிக அவதானம் செலுத்தவேண்டும் என்றும் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

‘யுக்திய’ நடவடிக்கையை உடனடியாக இடைநிறுத்தி, அதுகுறித்து மறுபரிசீலனை செய்து, மனித உரிமைகளின் பிரகாரம் இந்த பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இலங்கையில் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையில் இராணுவத்தின் வலுவான அணுகுமுறை இருப்பதாகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் நூற்றுக்கணக்கானோர் இராணுவத்தால் நடத்தப்படும் கட்டாய புனர்வாழ்வு மையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாதென ஐ.நா மனித உரிமை பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

ஆனால், சர்வதேசத்தில் இருந்து எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும், போதைப்பொருள் வலையமைப்புக்கு முடிவுகட்டும்வரை ‘யுக்திய’ நடவடிக்கை தொடரும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் சூளுரைத்துள்ளார். ‘யுக்திய’ செயற்றிட்டத்தின் முதல் மாத நடவடிக்கை வெற்றியளித்துள்ளது. எனினும், ‘யுக்திய’ நடவடிக்கையை முன்னெடுக்கும்போது பல தடைகளும் வருகின்றன, சர்வதேச ரீதியில் அழுத்தங்கள் வருகின்றன, நாட்டுக்கு எதிராகச் செயற்படும் சில குழுக்கள் உள்ளன, அந்த குழுக்களும் எதிர்க்கின்றன, எமக்கு எதிராகச் செயற்படுகின்றன, சமூகவலைத்தளங்களில் சேறு பூசுகின்றன. போதைப்பொருள் வலையமைப்பில் உள்ளவர்களிடம் பணம் வாங்கும் தரப்புகளே இந்த செயலில் ஈடுபட்டுள்ளன.

‘யுக்திய’ நடவடிக்கையை நிறுத்துவதற்கு சில மதத்தலைவர்கள் முற்படுகின்றனர், சில சட்டத்தரணிகளும் தொடர்புபட்டுள்ளனர், அரசியல் கட்சிகளில் உள்ள சிலரும் தொடர்புபட்டுள்ளனர். அத்துடன், ‘யுக்திய’ நடவடிக்கை என்பது ஊடக கண்காட்சி, நாடகம் என்றெல்லாம்கூட விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. சர்வதேச மனித உரிமை ஆணைக்குழு கடிதம் அனுப்பியுள்ளது. அது பற்றி நான் அலட்டிக்கொள்வதில்லை, போதைப்பொருளுக்கு முடிவு கட்டும்வரை எமது பணி தொடரும். ஒரு அடிகூட பின்வாங்கமாட்டோம். பாதாள உலத்தினரும் போதைப்பொருள் கடத்தல்காரர்களையும் வைத்திருக்க முடியாது. எனவே, வீணாகச் சாகாமல் அவர்கள் தமது நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் எச்சரித்துள்ளார்.

ஐ.நா. மற்றும் மனித உரிமைகள் அமைப்புக்களிடமிருந்து மட்டுமன்றி, பொது அமைப்புக்கள், பொதுமக்களிடமிருந்து கூட ‘யுக்திய’விற்கு கடும் எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன. தேசபந்து தென்னகோவின் ‘யுக்திய’ என்ற வலையிலும் ஓட்டைகள் அதிகம் உள்ளன, அந்த வலையில் அப்பாவி மக்களே சிக்கி வருகின்றனர். ‘யுக்திய’ என்பது ஊடகத்துக்கான நாடகம்.

பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், பொலிஸ் மா அதிபராகும் கனவில் இருக்கின்றார், அவருக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் உள்ளன, இப்படியான ஒருவர்தான் தனது கனவை நிறைவேற்றப் பயன்படுத்தும் யுக்தியே ‘யுக்திய’ நடவடிக்கை என்கின்றார் சட்டத்தரணி ஹர்சன நாணயக்கார .


போதைப்பொருள் கடத்தல்காரர்களைக் கைது செய்வதற்கான சுற்றிவளைப்புக்கள், தேடுதல்கள், சோதனைகள் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் நடத்தப்படுவதில்லை . போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் அரசியல்வாதிகள் இருப்பது அனைவரும் அறிந்ததே. அவர்களில் சிலர் தெமட்டகொட போன்ற பிரதேசங்களில் செயற்படுகின்றனர். இங்கு எந்த சுற்றிவளைப்பும் தேடுதலும் நடத்தப்படுவதில்லை. போதைப்பொருட்களை ஒழிப்பு நடவடிக்கைகள் ஏன் இந்தப் பகுதிகளில் முன்னெடுக்கப்படவில்லை? ஒரு சில இடங்களில் நடத்தப்பட்டாலும் அது நடக்கப்போகும் விடயம் முன்கூட்டியே சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்குக் கசிய விடப்படுகின்றது. பாதாள உலகக் குழுத் தலைவர் ஒருவரால் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு வாழ்த்துப் பதாகை அமைக்கப்பட்டுள்ளது. இது எவ்வாறு சாத்தியம்? என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இராஜாங்க அமைச்சர் ஒருவரின் ஒத்துழைப்புடன், கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் சட்டப்பூர்வமான அனுமதியுடன் தெஹிவளை, வெள்ளவத்தைக்கு இடைப்பட்ட பகுதியில் கரையோரத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஹோட்டல் ஒன்று போதைப்பொருள் வர்த்தகர் ஒருவருக்கு உரியது என்ற தகவல் வெளியிடப்பட்டு, அது இடித்தழிக்கப்பட்டது. குறித்த ஹோட்டல் கட்டடம் சட்டவிரோதமானது. கரையோர பாதுகாப்பு திணைக்களத்திடம் உரிய அனுமதி பெறாமல் நிர்மாணிக்கப்பட்டுள்ளதால்தான் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது என பொலிஸார் தெரிவித்தனர். குறித்த ஹோட்டல் சட்டவிரோதமானது எனில், அதற்கு அருகில் கடற்கரையில் அமைந்துள்ள இரு ஹோட்டல்களும் சட்டவிரோதமானவை தானே! பொலிஸாரின் இந்த கோட்பாட்டின்படி அந்த ஹோட்டல்களும் உடனடியாக இடிக்கப்பட வேண்டும். இந்த இரண்டு ஹோட்டல்களும் யாருடையது? அது இராணுவத்தின் உயர் பதவியிலுள்ள ஒருவருக்கு சொந்தமானவை. வர்த்தக போட்டியே ஹோட்டல் இடிப்புக்கு காரணம். இதன் மூலம் ‘யுக்திய’ வின் நோக்கத்தை அறியலாம் எனவும் மக்கள் கூறுகின்றனர்.

‘யுக்திய’ நடவடிக்கை அறிக்கைகளின்படி, கொழும்பு பகுதியில் பல கணவன்- மனைவி சேர்த்து கைது செய்யப்பட்டுள்ளனர். இதனால் அவர்களின் குழந்தைகள் தவிக்கின்றனர், அவர்களுக்கு உணவு மற்றும் பாதுகாப்பு வழங்க யாரும் இல்லை. சட்டத்தரணியை ஒழுங்கு செய்ய பணம் இல்லை. சிறுவர்கள் பாதாள உலகத்தில் சேர்வதற்கும், பெண்களை விபசாரத்திற்கு அழைத்துச் செல்வதற்குமே ‘யுக்திய’ முன்னெடுக்கப்படுகின்றதா? ‘யுக்திய’ நடவடிக்கையில் இன்னும், போதைப்பொருள் விநியோகத் தொழிலின் முக்கிய புள்ளிகளை பொலிஸார் கைது செய்ததாக எந்த செய்தியும் வரவில்லை. முக்கிய சந்தேக நபர்களின் பெயர்கள் பெரும்பாலும் ஊடகங்களில் அறிவிக்கப்பட்டன. ஆனால், அந்த பெரிய மீன்கள் பொலிஸாரால் பிடிக்கப்படுவதைப் பார்க்க நாங்கள் காத்திருக்கிறோம். ஆனால், சின்ன மீன்களே சிக்குகின்றன. பெரிய மீன்கள் பாதுகாக்கப்படுகின்றன எனவும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். போதைப்பொருள் இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள் வர்த்தகர்கள், பாதாளக் குழுத்தலைவர்கள், அவர்களுடன் தொடர்புபட்ட அரசியல்வாதிகளை இந்த ‘யுக்திய’ வேட்டையாடினால் அதற்கு பொதுமக்கள் பூரண ஆதரவளிப்பார்கள். ஒரு நடவடிக்கைக்கு மக்களின் ஆதரவிருந்தால் மனித உரிமை அமைப்புக்கள், பொது அமைப்புக்கள் எதிர்ப்பதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படாது. ஆனால், இந்த ‘யுக்திய’ என்ற நடவடிக்கை போதைப்பொருள் இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள் வர்த்தகர்கள், பாதாளக் குழுத்தலைவர்கள், அவர்களுடன் தொடர்புபட்ட அரசியல்வாதிகளை பாதுகாப்பதாலேயே பொதுமக்களின் கடும் எதிர்ப்பை எதிர்கொண்டுள்ளது.

## கடிதங்கள்

### வடிகால்கள் அமைப்பு



முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு, தேவிபுரம் கிராமத்தில் முதன்மை வீதியின் இரு புறங்களிலும் வடிகால் அமைக்கும் பணிகளை கிராம மக்கள் முன்னெடுத்துள்ளனர்.

பரந்தன்-புதுக்குடியிருப்பு வீதியில் தேவிபுரம் சந்தியில் இருந்து தேவிபுரம் நோக்கி செல்லும் ஆறு கிலோ மீற்றர் வரையான வீதி 2018ஆம் ஆண்டு நிரந்தரமாக புனரமைக்கப்பட்டது.

ஆனால், வீதியின் இருபுறமும் வடிகால்கள் அமைக்கப்படாததன் காரணமாக வெள்ளம் பரவுகின்ற நிலைமை காணப்படுகின்றது.

இதற்கமைய, நிரந்தரமாக புனரமைக்கப்பட்ட வீதியில் இருந்து 1,800 மீற்றர் தூரம் சுடலைக்குச் செல்லும் வீதி இப்பகுதி கடற்றொழிலாளர் சங்கத்தினர் மற்றும் விளையாட்டுக் கழகத்தினர் இணைந்து வீதியின் இரு புறமும் வடிகால் அமைக்கும் பணிகளை முன்னெடுத்து உள்ளனர். இதன் காரணமாக தேவிபுரத்தில் வாழ்கின்ற 270 வரையான குடும்பங்கள் போக்குவரத்து நன்மையடைவார்கள்.

- நடராசா கிருஸ்ணகுமார்

# காதல்





சரவணபவன் ஆதலவன்

வாழ்க்கையின் அந்திமத்தில் இருந்த அப்பா கதையோட கதையா. "பெரியவன் உருப்படியா எதையாவது செய்ய வேணும் என்று நினைச்சால் இந்த இயக்கங்கள் செய்யுற கொலைகளை பற்றிய தெளிவான பார்வையை வைச்சுக் கொள். அவங்கள் அதுக்கு வியாக்கியானம் சொல்வாங்கள். உண்மை போலத் தெரியும். நான் பட்டதில் சொல்லுறன். உங்களை பாவிக்க பொய்களை அடுக்குவாங்கள். நானும் நல்லவன் இல்லை. அவங்களைப் போல.

வீட்டுத் தலைவாசல் படியில் குந்தியிருந்த எனக்கு ஏதோ தியானத்தில் சொன்னார். எங்களுக்குள் நடக்கும் வழமையான நாட்டு நடப்பு அலம்பல். வெளிப்படையா பலதும் கதைப்பம். தனது பழைய காதலைக் கூட மறைக்காமல் சொல்லுவார். "அமைதிக்கு பெயர்தான் சாந்தி..." பாடல் கேட்கும் போதே அம்மா "அவற்ற பாட்டு வந்துட்டு" என்று நக்கலா சிரிப்பா. அப்பாவின் முகம் பிரகாசமாவதை நினைவில் வைத்திருந்தேன். ஒருநாள் அந்தக் கதையையும் உதில இருந்து சொன்னார்.

ஆறடி ஊஞ்சல் ஒரு ஆள் நீட்டி நிமிர்ந்து படுக்கக் கூடிய அளவில் அகலமும் போதுமாக இருந்தது. இரும்புச் சங்கிலிகள் நான்கும் அதை தாக்குகின்றன. கீச்சுக் கீச்சு என்று உராய்ந்து மெதுவாக ஆடிக் கொண்டிருந்தது. அப்பா அதில் இருந்தார். இரண்டு முழங்கைகளும் அந்தந்த பக்கத்து முழங்கால்களில் பொறுத்திருந்தது. கைகள் இரண்டும் பிணைந்திருக்க, வலது கையின் சுட்டு விரலுக்கும் நடுவிரலுக்கும் இடையில் பாதி நீளத்தில் பீடி விம்மி உருகியது. நிமிர்ந்த முதுகை வலிந்து வளைத்து சற்று கூனி முகத்தை நேராக வைத்து படலையை பார்த்துக் கொண்டிருந்தார். தெளிவான பார்வை. அவரின் பார்வையில் இருந்த கூர்மையும் தீர்க்கமும் வேறு எவரிடமும் நான் பார்க்கவில்லை. மனதுக்கும் பார்வைக்கு என்ன சம்பந்தம்? தீர்க்கமான எண்ணங்கள் இருந்தால் நிதானமான பார்வையில் வெளிப்படும் என்று நினைக்கிறேன்.

ஒழுங்கை முகப்பில் ஒரு கரும் பச்சை நிற பிக்கப் தூசு கிளம்ப வந்து நின்றது. எங்கள் வீடிருக்கும் குச்சொழுங்கைகளுக்கு வாகனங்கள் வாரது அருமை. வாரதெண்டால் ஐஸ்க்ரீம் வான் கரகரத்த ஸ்பீக்கர் கட்டி கத்திக்கொண்டு வரும். அப்பா இந்தியன் ஆமி இருந்த நேரம் ரோந்து வாரவர்களும் நடந்துதான் வருவார்கள். நான் எழுந்து நின்று பார்த்தேன். வேலிக்கு மேலாக தெரிஞ்சது. உயரமான ஆள் இறங்கி வந்துகொண்டிருந்தார். எங்களது வீட்டுக்கு வரும் நூறு அடி நீள ஒழுங்கையின் முகப்பில் வரும்போதே வருபவர் வாட்டசாட்டமான மனிதராக தெரிந்தார். இடுப்பில் அகலப் பட்டி ஒன்று. அதில் கைத்துப்பாக்கி தொங்கியது.

"ஆரப்பா வாரது? இயக்க ஆள் போல கிடக்கு" அப்பாவை திரும்பிப் பார்க்காமல் கேட்டேன்.

"பொறு வரட்டும்" எழுந்து படலையை நோக்கி நடந்தார்.

"டேய் பழனி என்ன அப்பிடி பார்க்கிறா? நான் தான்டா தக்கன்" ஓடிவந்து அப்பாவை கட்டி அணைத்தார். அப்பாவின் தலை முடியெல்லாம் நரைத்திருக்க வந்தவரின் கரு கரு முடியுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் பெரிய வித்தியாசம். எப்படி இவர்கள் நண்பர்கள்? முன்னர் ஒரு தடவை கூட எங்கள் வீட்டுக்கு வரவில்லை. பிக்கப் அருகில் இளைஞன் ஒருவன் பெரிய துப்பாக்கியை தோளில் சுமந்து கொண்டு நின்றான்.

"கண்டு எவ்வளவு நாளாச்சு, நல்லாயிருக்கிறியா? இதார் உன்ர மேனே? எத்தின பிள்ளைகள்?" வந்தவர் ஆர்வமாக கேள்விகளை அடுக்கினார். அப்பா வாயடைத்துப்போய் நின்றார். முகத்தில் கலவையான உணர்வுகள். வில்லங்கமாக முகத்தில் சிரிப்பை வரவழைத்தார். மெலிதாக சிரித்தார்.

வீட்டில் அம்மாவும் தம்பியும் இல்லை. இருந்திருந்தால் அம்மா அதிர்ச்சி அடைந்திருப்பார். அவருக்கு இயல்பாகவே பயந்த சுபாவம். ஆயுதங்களுடன் திரிபவர்களை வீதியில் கண்டாலே உதறல் எடுக்கும். இப்போ வீட்டு முற்றத்தில் எப்படி எடுத்துக் கொள்ளுவார். அதுவும் அப்பாவுக்கு நண்பர் என்று வேறு சொல்லி நட்பு பாராட்டுகிறார். முற்றத்தில் பிளாஸ்டிக் கதிரைகளில் அமர்ந்து பதினைந்து நிமிடங்கள் அப்பாவும் நண்பரும் தங்கள் இளமைக் கால நினைவுகளை பகிர்ந்து கொண்டிருந்தனர். இடையில் அப்பா என்னை பார்த்து "அம்மாவை கூட்டியா குடிக்கத் தேத்தண்ணி ஊத்த வேணும்" என்றார்.

"அது பரவாயில்லை இன்னொரு நாள் நேரம் கிடைச்சால் வாறன்" நயமாக மறுத்து விட்டார்.

நான் நகராமல் இருவரின் பேச்சையும் அவதானித்துக் கொண்டிருந்தேன். அப்பா ஓரளவு ஆசுவாசமாக பேசத் தொடங்கியிருந்தார். வந்தவர் அடிக்கடி சுற்றுமுற்றும் பார்வையை செலுத்திக் கொண்டிருந்தார். கீழே நாலு வரி கிடுகும் மேலே நிமிர்த்தி வைத்து பனையோலையாலும் அடைக்கப்பட்ட வேலிகள் நாலாபுறமும் இருந்தாலும் கரையான் ஏறி உலிரும் நிலையில் இருந்தது.

தக்கன் தான் போராட்டத்தில் இணைந்தது பற்றிய பேச்சுக்களை கூடுமானவரை தவிர்த்தார். அப்பாவோ எச்சரிக்கையாக கதையை முடித்து அவரை அனுப்புவதில் முனைப்பாகவிருந்தார். "அந்த நேரம் ஒழுங்கா படிச்சிருந்தால் நான் ஏன் இந்தியாவுக்கு ஓடி ஒளிச்சிருக்க வேணும். மானிப்பா கிண்டு கொலிச் காலமும் ஒரு காலம் தான் என்ன பழனி?"

"அதையெல்லாம் ஆர் மறக்கிறது"

பழைய நண்பனைக் கண்டதில் அப்பாவும் அந்த நினைவுகளில் மூழ்கினார். அவரை மச்சான் போட்டு கதைக்க அப்பா தயங்கியது போல இருந்தது. இருள் கவிழும் நேரம். அம்மாவும் தம்பியும் இன்னும் வரவில்லை. தொந்தரவான அமைதி அந்தச் சூழலில் பரவியிருந்தது.



"நான் இந்தியாவில ட்ரைனிங் முடிச்சு இப்ப உங்க உடுவில் காம்ப்ல இருக்கிறன். அம்மாவும் மோசம் போய் ரெண்டு வருசமாகுது"

"என்ன எங்களுக்கு மாறி மாறி இடம்பெயர்ந்து அலையிறதில காலம் போகுது" சலித்துக் கொண்டார் அப்பா.

"பாத்திரங்கள் காம்பில நிவாரணமா குடுக்கிறாங்கள். அலுமினிய தட்டுகளும் ரெண்டு சருவச் சட்டிகள் ஒரு சின்ன பானையும் வரும். நான் சொல்லி விடுகிறன். என்ர பேர சொல்லி வேண்டு"

"சரி நாளைக்கு காத்தால வாறன்" என்று சட்டென்று யோசனையில் மூழ்கினார் அப்பா.

"ஏன் பயப்பிடுறியா?"

"அதுக்கில்ல சனத்தோட சனமா வந்து வாங்கிட்டால் பயமில்லை தானே" இதைக் கேட்டு தக்கன் பெரிதாக சிரித்தார். அதை ரசிக்கும் நிலையில் அப்பா இல்லை என்பது அவரின் தர்மசங்கடமான நிலையில் தெரிந்தது.

"பழைய பழனியன் செத்திட்டான் போல. என்ன ஆட்டம் போட்டம்? இப்ப எல்லாம் அடங்கிட்டுது. நான் இன்னும் அதே ஆட்டத்தில் நிக்கிறன்"

"பிள்ளைகள் குடும்பமெண்டு வந்தால் எப்பிடி" என்றார் அப்பா.

தூரத்தில் நாய்கள் கலவரமாக குரைக்கத் தொடங்கியது. அவரை போகச் சொல்வது எப்படி என்று தெரியாமல் அப்பா துடித்தார்.

"எனக்கும் குடும்பம் பிள்ளைகள் இருக்கு. எல்லாரும் இந்தியாவில. சரி மச்சான் நான் வெளிக்கிட போறன்" அவர் எழுந்தார். சட்டென்று அப்பாவின் முகத்தில் சந்தோஷச்சாயல்.

அப்பாவின் முதுகில் தட்டினார். "வாறன்" என்று வேகமாக பிக்கப் நோக்கி நடந்தார்.

அவரைக் கண்டதும் மெய்ப்பாதுகாவலன் ஓட்டுநர் இருக்கை பக்க கதவு கண்ணாடியில் தட்டினான். பிக்கப்பின் முடுக்கிய இயந்திரம் மெலிதாக அலறத் தொடங்கியது.

அப்பா குழப்பமான மனநிலையில் மீண்டும் தனது இடத்தை ஊஞ்சலிலுக்கு மாற்றினார்.

என்னை பார்த்துக் கொண்டு புதிய பீடியை பற்ற வைத்தார். "சாக முன்னம் இவங்களை திரும்ப பாக்க வேணும் என்றிருந்திருக்கு. இனி இவங்கள் எவ்வளவு காலம் இருப்பாங்கள் எண்டு ஆருக்குத் தெரியும்" என்று முணுமுணுத்தார்.

நான் பதில் பேசாமல் தலையை மட்டும் ஆட்டினேன். எனக்கு தக்கரை பற்றி நல்ல அபிப்பிராயம் வந்து விடக்கூடாது என்ற பதைப்பு அவருக்கு இருந்திருக்கும் போல.

அம்மாவும் தம்பியுடன் மேற்குப் பக்க வேலிப் பொட்டுக்கால பதறிக்கொண்டு வந்தார்.

"ஆரது துவக்கோட வந்தது?" முகம் முழுதும் வியர்த்து வழிந்தது. போட்டிருந்த சோட்டியும் முக்காவாசி நனைந்து கிடக்க பின்னால் தம்பியும் மூச்சிறைக்க வந்தான்.

"நீ கண்டனியே?"

"வசி வந்து சொன்னவன்" வசந்தி அன்ரியின் மகன். அவன் வீடு எங்களது வீட்டுக்கு ரெண்டு வளவு தள்ளியிருந்தது. வேலிகள் மறைப்புகள் இல்லாத காணி ஒழுங்கையில் தக்கன் வந்ததையும் பெரிய துவக்கோட மற்றவனையும் கண்டிருக்கலாம். உடன செய்தி சிட்டாக பிறந்திருக்கு.

"தக்கன் தான் முந்தி என்னோட படிச்சவன்"

"சாந்திக்கு பின்னால திரியேக்க உங்கட லெட்டர் கொண்டே அவளுக்கு குடுத்தவன் தானே?"

"ஏனப்பா உந்த பழங்கதைய கதைக்கிறா. நான் வேற பயத்தில நிக்கிறன். இப்ப ஆர் எந்த இயக்கத்துக்கு போட்டுக் குடுக்க போறாங்கலெண்டு தெரியேல. நீ விழல் கதை கதைக்கிறா"

காதல் கதைக்கு அண்டைக்கு தான் அப்பா சிடு சிடுடென்று எரிந்து விழுந்ததை பார்த்தேன். உயிரை குடுத்து காதலிக்கிறது எல்லாம் சும்மா இல்ல.

---

unicef for every child

சிறுவர்கள் மற்றும் இளையோர் கட்டளைச் சட்டத்தின் திருத்தங்களுடன்

# யுனிசெப் நிறுவனம் திருப்திப்படுகின்றது

**இலங்கையின் சிறுவர்கள் மற்றும் இளையோர் கட்டளைச் சட்டத்தில் (Children and Young Persons Ordinance–CYPO) நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, அவை 2024 ஜனவரி 01ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளன. இது இலங்கை சிறுவர்களின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதற்கான முக்கியமானதொரு முன்னெடுப்பாகும்.**

1939ஆம் ஆண்டு முதல் இலங்கைச் சிறுவர்களுடன் தொடர்புடைய நீதியை ஒழுங்குபடுத்தும் ஒரு சட்டவாக்கமாக இருந்து வருகின்ற இக்கட்டளைச் சட்டமானது, ஏற்கெனவே

16 வயதிற்குப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாகக் கவனம் செலுத்தியதுடன் தற்போது இந்தத் திருத்தத்தினூடாக அந்த வயதெல்லை 18 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அத்துடன், சிறுவர்கள் மற்றும் கட்டிளமைப் பருவத்தினர் மீது பெற்றோர், ஆசிரியர்கள் அல்லது பாதுகாவலர்கள் பிரயோகிக்கும் உடல் ரீதியான தண்டனைகளை நியாயப்படுத்தி அவர்களுக்கெதிரான சட்ட ஏற்பாடுகளுக்கு இடங்கொடுக்காத குறித்த கட்டளைச் சட்டத்தின் ஒரு உறுப்புரை அல்லது ஒரு பகுதி இத்திருத்தத்தினால் இரத்துச்செய்யப்பட்டுள்ளது.

இலங்கைச் சட்டங்களைச் சிறுவர் உரிமைகள் தொடர்பான சர்வதேச தரநியமங்களுடன், குறிப்பாகச் சிறுவர் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்துடன் சீரமைப்பதற்கு இத்திருத்தங்கள் பங்களிப்புச் செய்வது மாத்திரமன்றி, நாட்டில் சிறுவர்கள் மற்றும் கட்டடிளமைப் பருவத்தினரின் தேவைகள் மற்றும் சவால்களுக்கு உரிய தீர்வுகளை வழங்குமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

யுனிசெப் நிறுவனத்தின் இலங்கை நாட்டுப் பிரதிநிதி, கிறிஸ்டியன் ஸ்கூக், 'சிறுவர் உரிமைகள் மற்றும் இளையோர் கட்டளைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் இலங்கையின் சிறுவர் உரிமைகளுக்கான ஒரு மைல்கல்லாக இருப்பதுடன்,

அது ஒவ்வொரு பிள்ளையினதும் உரிமைகள் மற்றும் கண்ணியத்தை நிலைநிறுத்தும் நீதி முறைமையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும், இலங்கையில் சகல சிறுவர்களுக்கும் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில், பாடசாலை மற்றும் வீடு உள்ளடங்கலாக அனைத்து மட்டங்களிலும் சிறுவர்களுக்கெதிரான உடல் ரீதியான தண்டனையை முற்றாகத் தடுக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருப்பது இந்தத் திருத்தத்தின் புரட்சிகரமான முன்னேற்றமாகும்' என்று குறிப்பிட்டார்.

இத்திருத்தங்கள் சட்டத்திற்கு முரண்படும் சிறுவர்களை கையாளும் நடவடிக்கைகளில் புரட்சிகமானதொரு நகர்வாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், இத்திருத்தங்களுக்கு முன்பு குற்றமிழைத்த 16 - 18 வயது சிறுவர்கள் வயது வந்தோரின் சிறைக்கூடங்களிலேயே வைக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு பொருத்தமான புனர்வாழ்வுத் திட்டங்களோ அல்லது பராமரிப்பு நடவடிக்கைகளோ இருக்கவில்லை. என்றாலும், தற்போது அமுலுக்கு வந்திருக்கும் கட்டளைச் சட்டத்தின் திருத்தங்களின் விளைவாக இத்தகைய சிறுவர்கள் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களங்களின் மேற்பார்வையின் கீழ், புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுவதுடன், இங்கு ஒழுக்காற்று அணுகுமுறையை விட புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவமளிக்கப்படும்.

ஒரு பிள்ளையைத் தடுப்புக் காவலில் வைப்பது இறுதி முயற்சியாக இருக்க வேண்டுமென்றும் அது மிகவும் குறுகிய காலத்திற்கு மாத்திரம் இருக்க வேண்டுமென்றும் சிறுவர் உரிமைகளுக்கான சமவாயம் வலியுறுத்துகின்றது. ஏனெனில், நிறுவனமயமாக்கல் பிள்ளையின் அபிவிருத்திக்கும் மீள் ஒருங்கிணைப்பதற்கும் தடையாக இருந்து வன்முறை மற்றும் வறுமைக்கு இட்டுச்செல்லும் என்றும் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

எனவே, இளம் பருவக் குற்றவாளிகளுக்கு தடுப்புக்காவல் நடவடிக்கைகளுக்குப் பதிலாக மிகவும் வினைத்திறனுடைய சிறுவர்களுக்கு பாதுகாப்பான குடும்ப-மைய புனர்வாழ்வு நடவடிக்கைகளை முன்னுரிமைப்படுத்துமாறு யுனிசெப் நிறுவனம் நீதித்துறை, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் துறைகளில் பணியாற்றும் கரிசனையாளர்களை வேண்டிக்கொள்கின்றது.

யுனிசெப் நீண்டகாலமாக உலகளாவிய சிறுவர்களின் உரிமைகளுக்காகக் குரல்கொடுத்து வருகின்ற ஒரு நிறுவனம் என்ற வகையில், இலங்கையின் இத்திருத்தங்களிலும் அதன் ஆதரவு ஆழமாக வேரூன்றியுள்ளது. அந்த வகையில், சிறுவர்களுக்கான இலங்கையின் நீதித்துறை பற்றி யுனிசெப் நிறுவனம் 2023இல் நடத்திய ஒரு ஆய்வில், முக்கியமான தரவு இடைவெளிகளை அடையாளப்படுத்தியதுடன், சிறுவர்களுக்கான நீதித்துறைப் பாதுகாப்பின் பொருத்தப்பாடு மற்றும் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்காகக் கூடிய விரைவில் மேற்கொள்ள வேண்டிய மறுசீரமைப்பு நடவடிக்கைகளும் கோடிட்டுக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, சிறுவர்கள் மற்றும் இளையோர் கட்டளைச் சட்டத்தில் செய்துள்ள திருத்தத்தில் இந்தப் பரிந்துரைகள் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளதுடன், பிள்ளையின் நலனை முன்னுரிமைப்படுத்தும் விதத்தில் நீதித்துறையைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. சிறுவர்கள் மற்றும் இளையோர் கட்டளைச் சட்டத்தின் திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான இலங்கை அரசாங்கத்தின் தீர்மானமானது சர்வதேச சட்டத்தின் கீழ், அதன் கடப்பாடுகளை பூர்த்தி செய்வதையும் நாட்டின் இள வயதினரின் நலன்களை முன்னுரிமைப்படுத்துவதற்கான அர்ப்பணிப்பையும் வலியுறுத்துகின்றது.

யுனிசெப் நிறுவனம், ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒத்துழைப்புடன் நீதி அமைச்சு மற்றும் ஏனைய பங்காளி நிறுவனங்களுடன் இணைந்து, அனைவரும் நீதித்துறையை அணுகுவதற்கான வாய்ப்புக்களை வலுப்படுத்துவதோடு, நீதித்துறையில் வெளிப்படைத்தன்மை மற்றும் வகைகூறலை மேம்படுத்துவதோடு தரமான, வினைத்திறன்மிக்க சேவை வழங்கலையும் உறுதிப்படுத்துகின்றது.





# கொள்கைப் பிரகடன உரையின் சாராம்சம்

**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடரை, புதன்கிழமை [07] ஆரம்பித்து வைத்து கொள்கைப் பிரகடன உரையாற்றினார்.**

**காலை 10.30க்கு ஆரம்பித்த உரையை அவர், காலை 11.15க்கு நிறைவுக்கு கொண்டுவந்தார்.**

**ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர், ஜனவரி 26ஆம் திகதியன்று, ஜனாதிபதியால் ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில், ஐந்தாவது கூட்டத்தொடரின் முதலாவது நாள் பாராளுமன்ற அமர்வு இன்று வியாழக்கிழமை [08] கூடும்.**



1. 2022ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.9% என்ற நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை, 1977ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் தடவையாக 2023ஆம் ஆண்டின் இறுதியில் உபரி நிலைய அடைய முடிந்தது
2. 2022இன் இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.7% ஆக இருந்த வரவு-செலவுத் திட்ட முதன்மைப் பற்றாக்குறையானது 2023இல் முதன்மை வரவு- செலவுத் திட்ட உபரியை ஏற்படுத்த முடிந்தது என்றும், இது சுதந்திரம் அடைந்த 76 ஆண்டுகளில் 6ஆவது தடவையாக இலங்கையால் முதன்மை வரவு-செலவுத் திட்ட உபரியை உருவாக்க முடிந்தது.
3. 2021ஆம் ஆண்டில் 194,495 ஆக இருந்த சுற்றுலாப் பயணிகளின் வருகையை 2023ஆம் ஆண்டில் 1,487,303 ஆக உயர்த்த முடிந்ததாகவும், இந்த ஆண்டு ஜனவரியில் மாத்திரம் 200,000 க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்ததாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். வருடாந்தம் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 5 மில்லியனாக அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது.
4. 2022ஆம் ஆண்டு முழுதும் சரிந்த பொருளாதாரம் 2023இல் முன்னேற்றத்தை அடைந்திருப்பது தற்செயலாக அல்ல. மிகவும் கவனமாகவும் தொலைநோக்குடனும் தயாரிக்கப்பட்ட நுட்பமான பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்தியன் மூலமே அந்த நிலை ஏற்பட்டது
5. 2022இல் வரி செலுத்துவதற்கு பதிவு செய்தோர் தொகை 437,547 ஆக இருந்ததோடு 2023இல் இறுதிக்குள் அதனை 1,000,029 ஆக அதிகரித்துள்ளதாகவும், இது 130% அதிகரிப்பைக் காட்டுகிறது.
6. தற்போது நடைமுறையில் உள்ள ஊழல் ஒழிப்பு சட்டம் போன்ற சட்டங்களை அமுல்படுத்தும்போது, அரசியல் அல்லது வேறு எந்த அழுத்தங்களும் பிரயோகிக்கப்பட மாட்டாது என்பது நாட்டின் முன் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
7. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழ் கையகப்படுத்தப்பட்ட பல இலட்சம் ஏக்கர் காணிகளிலிருந்து உயர்ந்தபட்ச உற்பத்தியைப் பெறுவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் வீணாகும் காணிகளை அந்நிய செலாவணி மூலங்களாக மாற்றி பொருளாதார அபிவிருத்தியை வலுப்படுத்தும்.
8. ஒரு தீவு நாடாக எமது நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் அனைத்து பாதுகாப்பு வலையமைப்புகளும் நவீனமயமாக்கப்படும் என்றும் புலனாய்வு அமைப்புகள், பாதுகாப்பு உபகரணங்கள், பயிற்சி முறைகள், படைகள், தொழில்நுட்ப சாதனங்கள், மூலோபாய நடவடிக்கைகள் உள்ளிட்ட அனைத்து துறைகளும் நவீனமயமாக்கப்படும்.
9. நவீன மற்றும் வலுவான பொருளாதாரத்தை நோக்கி மாறும் வகையில் பொருளாதார மாற்றச் சட்டம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.
10. அரசியல் அபிலாஷைகளை மனதில் வைத்துக்கொண்டு, தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்காக, நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வழங்குவதன் மூலமோ அல்லது அழுது கண்ணீர் வடிப்பதனாலோ, நாட்டை முன்நோக்கி கொண்டு செல்ல முடியாது என்றும் எதிர்கால இளைஞர்களுக்காக நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதன் மூலமே நாடு முன்நோக்கி நகர்த்த முடியும் .
11. நாட்டைக் கட்டியெழுப்பும் கனவை நனவாக்க சிறந்த மாற்று வழிகள் இருந்தால் முன்வையுங்கள் என்றும் அது தொடர்பில் கலந்துரையாட தாம் எப்போதும் தயாராக இருப்பதாகவும், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களின் உயர்மட்ட அதிகாரிகளை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுக்கத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.
12. தேர்தலில் தனித்து போட்டியிட்டாலும் நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றிணைந்து செயற்படுமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பொதுஜன பெரமுன ஒன்றிணைத்தது போன்று ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி, நாட்டுக்கான பொதுவான பயணத்தில் இணையுமாறு அனைத்து தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தார்.



13. 2023 இல் 28 சதவீதமாக இருந்த வட்டி விகிதம் தற்போது 12 சதவீதமாக உள்ளது. 2022இன் இறுதியில், 52 பிரதான அரச நிறுவனங்கள் 745 பில்லியன் ரூபாய் நட்டம் ஈட்டின. செப்டெம்பர் 2023இற்குள், இந்த 52 நிறுவனங்களும் 313 பில்லியன் ரூபாய் லாபம் ஈட்டியுள்ளன. ஆனால், இந்நிறுவனங்கள் கடன் சுமையை தாங்க முடியாத நிறுவனங்களாக காணப்படுகின்றன.
14. 2022இன் இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.8 சதவிகிதமாக சுருங்கியது. 2022 முதல், தொடர்ந்து 6 காலாண்டுகளில் எதிர்மறையாக இருந்தது. ஆனால், 2023இன் மூன்றாம் காலாண்டில் 1.6 சதவீத வளர்ச்சியை எட்டினோம்.
15. நமது பொருளாதாரம் விண்கல் வேகத்தில் சரிந்தது. ஆனால், தற்போது எமக்கு அதனை மாற்ற முடிந்துள்ளது. அதை மீண்டும் ரொக்கெட் வேகத்தில் உயர்த்தியுள்ளோம். நாங்கள் வீ(V) வடிவ மீட்பு அல்லது வீ(V) வடிவ மீட்சியைப் பெற்று வருகிறோம்.
16. இந்நாட்டு மக்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு முறையான வருமானம் கிடையாது. பொருத்தமான வீடு இல்லை. இந்த மக்களுக்கு வருமான வழி மற்றும் வீட்டு உரிமை வழங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்போம். நகர்புர, குறைந்த வருமானமுடைய 50,000இற்கும் மேற்பட்டோருக்கு முழுமையான வீட்டுரிமை வழங்கப்படும்.
17. இந்த ஆண்டு அஸ்வெசும ஊடாக 24 இலட்சம் பேருக்கு நன்மைகள் அளிக்க எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் நாட்டின் கீழ், மட்டத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும். நமது நாட்டின் வரலாற்றில் இவ்வளவு பெரிய தொகை நிதி மானியம் வழங்கப்படவில்லை. வரும் பண்டிகை காலத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு தலா 20 கிலோ கிராம் வீதம் அரிசி, நிவாரணமாக வழங்கப்படும்.
18. 2022 ஒகஸ்ட் மாதமளவில், ஜனாதிபதி நிதியம் முற்றிலும் செயலிழந்தது. 9,000இற்கும் மேற்பட்ட மருத்துவ உதவிக்கான விண்ணப்பங்கள், பணம் இல்லாமல் குவிந்திருந்தன. ஒகஸ்ட் முதல் டிசம்பர் வரை மேலும் 4,000 விண்ணப்பங்கள் வரை கிடைத்தன. அவை அனைத்திற்கும் பணம் செலுத்தப்பட்டது. 2023இல் 4,917 நோயாளர்களுக்கு 915 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டது. தற்போது பணம் செலுத்துவதற்கு பல மாதங்கள் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. மூன்று அல்லது ஐந்து வேலை நாட்களுக்குள் பணம் செலுத்தும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
19. இந்த ஆண்டு அனைத்து மருத்துவ உதவிகளையும் 50 சதவீதத்தில் இருந்து 100 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். இந்த உதவித் தொகைகளுக்கு மேலதிகமாக ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் வேலைத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
20. கடந்த ஆண்டு பணவீக்கம் 50.06 சதவீதமாக இருந்தது. இன்று அது 6.4சதவீதமாக குறைந்துள்ளது. உணவுப் பணவீக்கம் 54.4 சதவீதமாக உள்ளது. இன்று அது 3.3 சதவீதமாக உள்ளது. அன்று ஒரு டொலரின் பெறுமதி 363 ரூபாய். இன்று 314 ரூபாயாகும். 2022 ஆம் ஆண்டின் இறுதியில், வரவு- செலவுத் திட்ட முதன்மை பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.7 சதவீதமாக இருந்தது.

போலந்து

# “போருக்கு தயாராக இருக்கிறோம்”




போலந்து பாதுகாப்பு அமைச்சர் விளாடிசா கோனேக் காமிஸ் செய்தியாளர்களை சந்தித்துப் பேசியபோது அவரிடம் “உக்ரேன் -ரஷ்யா இடையிலா போர் சூழலில் போலந்து மீதான போர் அச்சுறுத்தலுக்கு வாய்ப்பு உள்ளதா?” என கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்தபோது அவர் கூறியதாவது, “அனைத்து வகையான சூழ்நிலைகளையும் நான் எதிர்பார்க்கிறேன். அதில் மோசமானவற்றை மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்கிறேன். இன்று நாம் இருக்கும் சூழ்நிலையில் ஒரு பாதுகாப்பு அமைச்சராக பணி அதுதான். நாங்கள் எதற்கும் தயாராக இருக்கிறோம்.

இதனை வெறும் பேச்சுக்காக நான் சொல்லவில்லை. போலந்து இராணுவம் போர் அச்சுறுத்தலுக்குத் தயாராகும் உறுதியான நடவடிக்கைகளை ஏற்கெனவே தொடங்கியுள்ளது.

பெரிய அளவிலான ஆயுதக் கொள்முதல் மிகவும் முக்கியமானது என்றாலும், ஒவ்வொரு இராணுவ வீரருக்கான தனிப்பட்ட உபகரணங்களையும் நாங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்கிறோம்” என தெரிவித்துள்ளார்.




அமெரிக்கா

## கோமாவில் இருந்த பெண்ணை குணமாக்கிய ‘காமெடி’

அமெரிக்காவின் மிக்சிகன் பகுதியை சேர்ந்தவர் ஜெனிபர். இவர் கடந்த 2017ஆம் ஆண்டு ஒரு கார் விபத்தில் சிக்கி கோமா நிலைக்கு சென்றார். பல்வேறு இடங்களில் சிகிச்சை அளித்தும் அவரால் கோமாவில் இருந்து மீள முடியவில்லை. சுமார் 5 ஆண்டுகளாக அவர் வீட்டிலேயே படுத்த படுக்கையில் இருந்துள்ளார்.


அவரை கோமாவில் இருந்து குணமாக்கி சாதாரண நிலைக்கு கொண்டு வர அவரது தாய் பல முயற்சிகள் மேற்கொண்டு வந்தார். எனினும் அதற்கு சரியான பலன் கிடைக்கவில்லை.

இந்நிலையில், கடந்த 2022ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஜெனிபரின் தாய் வீட்டில் தனது மகனுடன் பேசி கொண்டிருந்தபோது, காமெடியை செய்துள்ளார். அதை கேட்ட, ஜெனிபர் சிரித்துள்ளார். இதை கவனித்த அவரது தாய் இன்ப அதிர்ச்சி அடைந்தார்.

5 ஆண்டுகளாக கோமாவில் இருந்த தனது மகன் தனது காமெடியை கேட்டு கோமாவில் இருந்து சற்று மீண்டதை அவரால் நம்பமுடியவில்லை. உடனடியாக அவரது மருத்துவரை அணுகி நடந்த சம்பவங்களை கூறினார். இதைத்தொடர்ந்து அவரை பேச வைப்பதற்கும், சாதாரணமாக இயங்க வைப்பதற்குமான நடவடிக்கைகளை மருத்துவ குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

சிலி

## முன்னாள் ஜனாதிபதி விபத்தில் பலி



தென் அமெரிக்காவில் அமைந்துள்ள நாடு சிலி. இந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஜெபஸ்டின் பினிரா. பெரும் செல்வந்தரான இவர், 2010 முதல் 2014 வரை மற்றும் 2018 முதல் 2022 வரை என இரண்டு முறை சிலி ஜனாதிபதியாக பதவி வகித்தார்.

இந்நிலையில், அந்நாட்டின் பிரபல சுற்றுலா தலமான லகோ ரங்கொ பகுதிக்கு ஜெபஸ்டின் பினிரா செவ்வாய்க்கிழமை (06) ஹெலிகொப்டரில் பயணம் மேற்கொண்டார். அந்த ஹெலிகொப்டரில் ஜெபஸ்டின் உட்பட மொத்தம் 4 பேர் பயணித்தனர்.

லகோ ரங்கொ அருகே சென்றுகொண்டிருந்தபோது, திடீரென ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் ஜெபஸ்டின் பினிரா உயிரிழந்தார். ஹெலிகொப்டரில் பயணித்த எஞ்சிய 3 பேர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்த அனைவரும் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புது டெல்லி

அரசு பேருந்துகளில்

## “திருநங்கைகளுக்கு இலவசம்”



புதுடெல்லியில் அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் கடந்த 2019 ஒக்டோபர் முதல் பெண்களுக்கு இலவச பயணத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொடர்ந்து இந்த திட்டத்தை திருநங்கைகளுக்கும் வழங்க வேண்டும் என கோரிக்கை எழுந்து வந்தது.

இதுதொடர்பான அறிவிப்பை புதுடெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அதில்,

“நமது சமூக சூழலில் திருநங்கைகள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களும் மனிதர்கள்தான், சமமான உரிமைகளைப் பெற்றுள்ளவர்கள். எனவே, அரசு பேருந்துகளில் அவர்களுக்கு கட்டணமில்லா பயணம் செய்யும் வசதி ஏற்படுத்தப்படும் என்றும், இதற்கான ஒப்புதலை அமைச்சரவை விரைவில் அளிக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.



புதுடெல்லி

## துணை இராணுவ படைகளில் 41,606 பெண்கள்

பாராளுமன்ற மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு மத்திய உள்துறை இணை மந்திரி நித்தியானந்த ராய் செவ்வாய்க்கிழமை (06) அளித்துள்ள எழுத்துப்பூர்வ பதிலில், மத்திய ரிசர்வ் பொலிஸ் படை, மத்திய தொழில் பாதுகாப்பு படை, இந்தோ-திபெத்திய எல்லை பொலிஸார், சஹஸ்திர சீம பால் மற்றும் எல்லை பாதுகாப்பு படை மற்றும் அசாம் ரைபிள் படைகளில் பெண்களை பணியமர்த்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை அமைச்சகம் எடுத்து வருகிறது.

இந்த ஆயுத பொலிஸ், அசாம் ரைபிள் உள்ளிட்ட துணை இராணுவ படைகளில் 41,606 பெண்கள் பணியாற்றி வருகின்றனர் என தெரிவித்துள்ளார். இந்த ஆள்சேர்ப்பு பணியை ஊக்குவிக்கும் நடவடிக்கையாக, அச்சு மற்றும் மின்னணு ஊடகம் வழியே பரவலாக விளம்பரப்படுத்தப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

ஜார்க்கண்ட்

## “நாய்கள் மீது பா.ஜ.கவுக்கு பிரியம்”

“இந்திய ஒற்றுமை நியாய யாத்திரை”யை கடந்த ஜனவரி 14ஆம் திகதி ஆரம்பித்த ராகுல் காந்தி, தற்போது ஜார்க்கண்ட் மாநிலத்தில் நடத்தி வருகிறார்.

இந்த நிலையில், நாய் ஒன்று சாப்பிட மறுத்த பிஸ்கெட்டை, ராகுல் காந்தி தனது ஆதரவாளருக்கு கொடுக்கிறார். இது தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் வெளியாகி சர்ச்சையாகியுள்ளது. பா.ஜ.க.வினர் பலரும் ராகுல் காந்தியை விமர்சித்து வருகின்றனர்.

இது தொடர்பில் ராகுல் விளக்கம் அளித்துள்ளார். அதில், “அந்தப் செல்லப் பிராணி நடுங்கி கொண்டிருந்தது. நான் பிஸ்கெட் கொடுத்தபோது அது பயந்திருக்க வேண்டும். எனவே, நாயின் உரிமையாளரிடம் பிஸ்கெட் கொடுத்து கொடுக்கச் சொன்னேன். அதன் பிறகு நாய் பிஸ்கெட்டைச் சாப்பிட்டது. இதில் என்ன பிரச்சினை? பா.ஜ.கவுக்கு நாய்கள் மீது அப்படி என்ன பிரியம் எனத் தெரியவில்லை” என்றார்.



ஆசியக் கிண்ணத் தொடர்:

# தென் கொரியா அவுட்

ஆசிய கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் ஆசியக் கிண்ணத் தொடரிலிருந்து தென் கொரியா வெளியேற்றப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஜோர்தானுடனான அரையிறுதிப் போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் தோற்றே தொடரிலிருந்து கொரியா வெளியேற்றப்பட்டுள்ளது. முதல் தடவையாக ஆசியக் கிண்ண இறுதிப் போட்டிக்கு ஜோர்தான் தகுதி பெற்றுள்ளது.

ஜோர்தான் சார்பாக அல் நைமட், சுலைமான் அல்தமரி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

முதலாவது டெஸ்டில்

## தென்னாபிரிக்காவை வென்றது நியூசிலாந்து



தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், மௌண்ட் மகட்டரேயில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து நேற்று முடிவுக்கு வந்த முதலாவது போட்டியில் 281 ஓட்டங்களால் நியூசிலாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா


நியூசிலாந்து: 511/10 (துடுப்பாட்டம்: றஷின் றவீந்திர 240, கேன் வில்லியம்சன் 118, கிளென் பிலிப்ஸ் 39, மற் ஹென்றி 27 ஓட்டங்கள். பந்துவீச்சு: நீல் பிரான்ட் 6/119, ருவான் டீ ஸ்வார்ட் 2/61, டேன் பற்றர்சன் 1/98, தெஷெபொ மொரெகி 1/110)

தென்னாபிரிக்கா: 162/10 (துடுப்பாட்டம்: கீகன் பீற்றர்சன் 45, டேவிட் பெடிங்ஹாம் 32 ஓட்டங்கள். பந்துவீச்சு: மற் ஹென்றி 3/31, மிற்செல் சான்ட்னெர் 3/34, றஷின் றவீந்திர 2/16, கைல் ஜேமிஸன் 2/35)

நியூசிலாந்து: 179/4 (துடுப்பாட்டம்: கேன் வில்லியம்சன் 109 ஓட்டங்கள். பந்துவீச்சு: நீல் பிரான்ட் 2/52, டேன் பற்றர்சன் 1/38, ருவான் டீ ஸ்வார்ட் 1/48)

தென்னாபிரிக்கா (வெ.இ: 529 ஓட்டங்கள்): 247/10 (துடுப்பாட்டம்: டேவிட் பெடிங்ஹாம் 87, ஸுபைர் ஹம்ஸா 36, ருவான் டீ ஸ்வார்ட் ஆ.இ 34, றேனார்ட் வான் தொன்டர் 31 ஓட்டங்கள். பந்துவீச்சு: கைல் ஜேமிஸன் 4/58, மிற்செல் சான்ட்னெர் 3/59, கிளென் பிலிப்ஸ் 1/30, மற் ஹென்றி 1/33, டிம் சௌதி 1/46)

போட்டியின் நாயகன்: றஷின் றவீந்திர



## வெளியேறும் திட்டமில்லை?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் முன்களவீரரான எர்லிங் பிறோட் ஹலான்டுக்கு கழகத்தை விட்டு வெளியேறும் எண்ணமில்லை எனக் கூறப்படுகிறது.

ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட்டில் 23 வயதான ஹலான்ட் இணையலாமெனக் கூறப்படுகின்ற நிலையிலேயே மேற்குறித்த கருத்து வெளியாகியுள்ளது.



## லிவர்பூல் செல்லும் சியெஸ்கா?

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஜுவென்டஸின் முன்களவீரரான பெடெரிக்கோ சியெஸ்காவை இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூல் அவதானிப்பதாகக் கூறப்படுகிறது.

காயம் காரணமாக தொடர்ந்து போட்டிகளில் விளையாடத் தடுமாறும் 26 வயதான சியெஸ்கா இம்மாதம் தொடக்கம் தொடர்ந்து போட்டிகளில் விளையாட எதிர்பார்த்துள்ளார்.



## லிவர்பூலின் முகாமையாளர் அலோன்ஸோ?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான லிவர்பூலின் முகமையாளர் ஜுர்ஜன் க்ளொப் இப்பருவகாலத்துடன் கழகத்தை விட்டு வெளியேறும் முடிவைத் தொடர்ந்து ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர் லெவர்குசனின் முகாமையாளர் ஸ்கெபி அலொன்ஸோவை லிவர்பூல் தொடர்பு கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 08, பெப்ரவரி 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.